விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 157 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 11 புதன்கிழமை (25.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே



## எரிபொருள் விலை அதிகரிப்பின் எதிரொலி



- பேருந்து கட்டணங்கள் உயர்வு
- முச்சக்கரவண்டி கட்டணம் அதிகரிப்பு
- சோற்றுப் பார்சல் விலை உயர்வு
- கொத்து, பிறைட் ரைஸ் விலை அதிகரிப்பு

# மீண்டும் அதிகரித்தது எரிபொருட்களின் விலை

- 92 ரக பெற்றோலின் புதிய விலை ரூ.420
- ஓட்டோ டீசலின் புதிய விலை ரூ.400
- 95 ரக பெற்றோலின் புதிய விலை ரூ.450
- சுப்பர் டீசலின் புதிய விலை ரூ.445



(15ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடியிலிருந்து மீள ஒத்துழைப்பு

## தொலைபேசி உரையாடலில் சமந்தா பவர் ரணிலிடம் உறுதி

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியால் நலிவடைந்துள்ள இலங்கைக்கு உதவி செய்ய அமெரிக்காவின் முன்னாள் ஐக்கிய நாடுகளுக்கான தூதுவர் சமந்தா பவர் முன்வந்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடியபோது இந்த உறுதியை அவர் வழங்கியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



கோப்புப்படம்

## சமையல் எரிவாயு விலையும் அதிகரிக்கலாம்?

### இன்றும் விநியோகம் நிறுத்தம் லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)
சமையல் எரிவாயு விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.
லிட்ரோ நிறுவனம் 15

## இலங்கைக்கு உதவிகள் வழங்குவதற்கு தயார்

### ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஜி.எல்.பீரிஸிடம் உறுதி



(கொழும்பு)
தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கான உதவிகளை வழங்க ஐக்கிய 15



### மண்ணெண்ணெய் விலையும் அதிகரிக்கப்படலாம்

எரிசக்தி அமைச்சர் காஞ்சன

03 ஆம் பக்கம் பார்க்க

# நாட்டின் ஸ்திரத்தன்மைக்காக கட்சி பேதமின்றி ஒத்துழையுங்கள்

## மத்திய வங்கி ஆளுநர் கோரிக்கை



(கொழும்பு)

நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு, கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழுவில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கி, நிதி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் 15

## பேக்கரி பொருட்களின் விலையும் அதிகரிக்கின்றது

(கொழும்பு)

பேக்கரிப் பொருட்கள் மற்றும் ஏனைய உணவுப் பொருட்களின் விலைகளை 10 வீதத்தினால் அதிகரிப்பதற்கு அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. 15

## எரிபொருளுக்கான நீள்வரிசை தொடர்கின்றது



(யாழ்ப்பாணம்)

கடும் பொருளாதார நெருக்கடியின் எதிரொலியாக நாடளாவிய ரீதியில் 15

## 21ஆவது திருத்தத்தை தாம் விரும்பியவாறு கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்கின்றது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்புக்கு மாறாக அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை தாம் விரும்பியவாறு கொண்டுவர இந்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்கவும் 19ஆவது திருத்தத்தை வலுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 20ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யவும், 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மீண்டும் அதிகரித்...

எரிபொருள் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன. நேற்று அதிகாலை 3 மணி முதல் குறித்த விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஒக்டெய்ன் 92 ரக பெற்றோல் லீற்றரின் விலை 82 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 420 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் ஒக்டெய்ன் 95 ரக பெற்றோலின் விலை 77 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 450 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 111 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 400 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 116 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 445 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சமையல் எரிவாயு...

இன்று உள்நாட்டு எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளது.

12.5 கிலோ எடை கொண்ட லிட்ரோ எரிவாயு சிலிண்டர் இன்று விநியோகிக்கப்படாது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், எரிவாயு சிலிண்டர்களைப் பெறுவதற்காக வரிசையில் நிற்க வேண்டாம் என அந்நிறுவனம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

3500 மெட்ரிக் தொன் திரவப் பெற்றோலிய வாயு (LPG) நாளை வியாழக்கிழமை இலங்கைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுவதால் குறித்த விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது கடும் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், எரிவாயு சிலிண்டர்களை பெறுவதற்கு பொதுமக்கள் பல மணித்தியாலங்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், லிட்ரோ நிறுவனம் இன்றும் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கைக்கு...

நாடுகள் சபையின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் உறுதியளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது, அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இதன்போது பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

## எரிபொருளுக்...

ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக யாழிலும் பொதுமக்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவரும் நிலையில் மீளவும் எரிபொருட்களின் சடுதியான விலை அதிகரிப்பு மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளதுடன் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமையும் யாழில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பரவலாகப் பல இடங்களிலும் மக்கள் மிக நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர்.

வலிகாமத்தில் சுன்னாகம், மருதனார்மடம் பகுதிகளில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்றைய தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் மிக நீண்ட வரிசைகளில் கொளுத்தும் வெயிலுக்கு மத்தியில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. (ம-7,18)

## நாட்டின் ஸ்திரத்...

நேற்று அரசாங்க நிதி பற்றிய குழுவில் முன்னிலையாகுமாறு அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது மத்திய வங்கி ஆளுநர் குறித்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதற்கு முன்னர் எரிபொருளுக்கு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டமையால், அதனைச் செயற்படுத்த முடியாமல்போன நிலையில், இன்று அதனை அறிமுகப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்த்து ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் அதற்கான பயணத்திட்டம் தொடர்பில் முழுமையான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் அரசாங்க நிதிபற்றிய குழுவின் தலைவர் அநுர பிரியதர்ஷன யாப்பா பரிந்துரைத்தார்.

அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரிய ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலக வங்கியின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் கொள்கைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 600 மில்லியன் அமெரிக்க டொலரை எதிர்காலத்தில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், எங்கிருந்தேனும் டொலர்களைப் பெற்றுக் கொடுத்தாலும் மின்சார சபை, கனியவளக் கூட்டுத்தாபனம், லிட்ரோ போன்ற நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள அதிக நட்டம் காரணமாக டொலர்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதிய ரூபாய் இல்லாமை பாரிய பிரச்சினையாக உள்ளது என்றும் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## நெருக்கடி...

குறித்த கலந்துரையாடலின்போது சமகால நெருக்கடியில் இருந்து இலங்கை மீள்வதற்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், G7 நாடுகள் போன்ற அமைப்புகளுடன் நெருங்கி செயற்படவுள்ளதாகவும் சமந்தா பவர் உறுதியளித்தார்.

இந்த மாத தொடக்கத்தில் அரசியல் அமைதியின்மையால் கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த இலங்கையர்களுக்கு அவர்தனது அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை மக்களுக்கு தனது ஆதரவை உறுதியளித்தார்.

நாட்டின் நெருக்கடியை சமாளிக்க உதவுவதாகவும் அவர் உறுதியளித்தார். அத்துடன் இலங்கை மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களை அவசரமாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரேனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் காரணமாக உணவு, எரிபொருள் மற்றும் உரங்களின் விலைகள் அதிகரித்துள்ளதுடன் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இது இலங்கையையும் பாதித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பேக்...

எரிபொருள்விலை அதிகரிப்பையடுத்துமேற்படிவிலை அதிகரிப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ம-7)

# 35 பல்கலைக்கழக மாணவர்கள் கைது

(கொழும்பு)

வயம்ப பல்கலைக்கழக மாணவர்கள் 35 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பகிடிவதை சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட மோதலுடன் தொடர்புடைய மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக பாதுகாப்பு அதிகாரி ஒருவரை தாக்கியதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்ட 35 பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றுக் காலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-7)

## 21ஆவது...

ஆணைக்குழுக்களை சுயாதீனமாக்கும் முயற்சிகளையும் அரசாங்கம் கைவிடக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சமூக வலைதளத்தில் காணொளி ஒன்றினை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ள அவர், அரசாங்கத்தின் மோசடி நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம-7)


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க அரசாங்கம் தீர்மானம்


(கொழும்பு)

**அதிகரிக்கின்ற பொருள் விலையேற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 33 இலட்சம் பேருக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ், இம்மாதம் முதல் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மாதாந்தம் 5000 ரூபாய் முதல் 7500 ரூபாய் வரையிலான நிதியுதவியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இதன்படி சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளர்களும் இந்தப் பலனை அனுபவிக்கும் வகையில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தின் முதல் கட்டமாக அடுத்த வாரம் மே மாதத்திற்கான உதவித் தொகையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட 300 மில்லியன் அமெரிக்க டொலர்களில் ஒரு பகுதியைப் பயன்படுத்தி பயனாளிகளுக்கு மூன்று மாத காலத்திற்கு நிவாரணம் வழங்க இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (நி)




# நிதி அமைச்சராக கோட்டாவே செயற்படுவார்

## அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நிதி அமைச்சர் பதவிக்கு அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படும் வரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நிதி அமைச்சராக செயற்படுவார் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி அமைச்சரவை கலைக்கப்பட்ட பின்னர் இலங்கையில் இதுவரை நிதியமைச்சர் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில், முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி மீண்டும் நிதியமைச்சராக நியமிக்கப்படுவதற்கான அழைப்பை அவர் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# திரிபோஷா தொழிற்சாலை மூடப்பட்டது

(கொழும்பு)

தொடரும் நெருக்கடியால் அரசாங்கத்திற்கு சொந்தமான 'திரிபோஷா' தொழிற்சாலை நேற்று முதல் மூடப்பட்டதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தானியங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சோளம் மற்றும் சோயா விநியோகம் முற்றிலும் தடைப்பட்டுள்ள நிலையில் திரிபோஷவை உற்பத்தி செய்வதில் பிரச்சினை எழுந்துள்ளது.

இதேவேளை நாடு முழுவதும் உள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளை ஊட்டச்சத்து குறைபாடு பாதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சுற்றுலா அபிவிருத்தி சபையின் தலைவர் இராஜினாமா



(கொழும்பு)

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையின் தலைவர் கிமாலி பெர்னாண்டோ தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது இராஜினாமா கடிதத்தை அவர் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு அனுப்பி வைத்துள்ளார். (நி)

# மோட்டார் சைக்கிளுக்கு 2500 ரூபாவுக்கு மட்டுமே எரிபொருள்

(கொழும்பு)

வாகனங்களின் அடிப்படையில் எரிபொருள் விநியோக நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் தொடரும் என அமைச்சர் அறிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளுக்கு அதி கபட்சம் 2,500 ரூபாவுக்கும் முச்சக்கர வண்டி 3,000 ரூபாவுக்கும் கார், வான்கள் மற்றும் எஸ்யூவிகள் 10,000 ரூபாவுக்கும் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும். (நி)

# எரிபொருள் விலை அதிகரிப்பின் எதிரொலி பேருந்து கட்டணங்களும் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை திருத்தத்திற்கு அமைய பேருந்து போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளுக்கான கட்டணங்களில் திருத்தத்தை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்த இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் 5 ரூபாவால் அதிகரிக்கப்படுமென குறிப்பிட்டுள்ளார். (நி)

# மண்ணெண்ணெய் விலையும் அதிகரிக்கப்படலாம்



(கொழும்பு)

அரசாங்கம் பயன்படுத்தும் விலைச்சூத்திரத்தின்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றுக்கு 275 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மானிய விலையில் மண்ணெண்ணெய் விற்பனை செய்வதால் அரசாங்கத்துக்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக அனைத்து வகையான எரிபொருட்களின் விலைகளும் ரூ.400 ஐ தாண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாவாக தொடர்ந்து விற்பனை செய்யப்படுவதாகவும், மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி)

# முச்சக்கர வண்டி கட்டணத்திலும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலை நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், முச்சக்கர வண்டி கட்டணத்தில் அதிகரிப்பு ஏற்படவுள்ளதாக அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர, கடந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் எரிபொருள் விலைகள் அதிகரித்தபோது முச்சக்கர வண்டி கட்டணத்தை அதிகரிக்கவில்லை.

முச்சக்கரவண்டித் தொழிலை நிலைநிறுத்தும் நோக்கில் முதல் கிலோமீற்றரின் கட்டணத்தை 100 ரூபாவாகவும் இரண்டாவது கிலோமீற்றர் பயணக் கட்டணத்தை 80 ரூபாவாகவும் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவி பிறீமியர் லீக் பாரதி ரைடர்ஸ் சம்பியன்




மல்லாவி பிறீமியர் லீக் மென்பந்தாட்டத்தின் இறுதி ஆட்டம் கடந்த 22 ஆம் திகதி மாலை மல்லாவி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற நிலையில் மல்லாவி பிறீமியர் லீக் போட்டித் தொடர் சம்பியனாக பாரதி ரைடர்ஸ் அணி தெளிவாகியுள்ளது.

மல்லாவி பிறீமியர் லீக் போட்டித் தொடரானது உள்நாட்டு மற்றும் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன், மல்லாவி மத்திய கிரிக்கெட் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதியன்று ஆரம்ப நிகழ்வுகளுடன் வெகு விமர்சையாக ஆரம்பமானது.

இத் தொடரானது 15 ஓவர்களைக் கொண்ட 30 லீக் போட்டிகள் வைக்கப்பட்டு அதில் புள்ளிப் பட்டியலில் உள்ள முதல் 4 அணிகளையும் தெரிவு செய்து 20 ஓவர்களைக் கொண்ட Qualifier-1, Eliminator மற்றும் Qualifier-2 ஆகிய தெரிவுப்போட்டிகள் நடைபெற்று போட்டித் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியிருந்த நிலையில் Qualifier-01 போட்டியில் வெற்றி பெற்று நேரடியாக இறுதிப்போட்டிக்கு பாரதி அணி தெரிவாகி உள்ளதுடன் Eliminator, Qualifier-02 ஆகிய போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று Alankulam Kings அணியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற இரு லீக் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகளை பெற்ற நிலையில் கடந்த 22 ஆம் திகதி விறுவிறுப்பான மாபெரும் இறுதிப் போட்டியில் பாரதி அணி சம்பியனாகியது. (4-281)

# டெஸ்ட் சம்பியன் சிப் ஸ்ரைக்கர்ஸ் அணி வெற்றி

அருணோதயா டெஸ்ட் சம்பியன்சிப் பருவ காலம் 1 கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமானது.

APL தலைவர் J-சந்துரு மற்றும் அருணோதயா சன சமூக நிர்வாகத்தின் கூட்டான ஏற்பாட்டில் இத் தொடர் நடை பெற்றது.

முதல் போட்டியில் ஸ்ரைக் கர்ஸ் அணியினை எதிர்த்து அருணோதயா கோச்சர்ஸ் அணி விளையாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கோச்சர்ஸ் அணி 64 ஓட்ட ங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்தது.

பதிலுக்கு துடுப் பெடுத்தாடிய ஸ்ரைக்கர்ஸ் அணி 169 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் கோச்சர்ஸ் அணி 136 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்ரைக்கர்ஸ் அணி 4 விக்கெட் இழப்புக்கு 34 ஓட்டங்களை பெற்று வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி அரி யாலை சரஸ்வதி சன சமூக நிலைய மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2624

### மயூரேசன்

நியாயங்கள்
நம் பக்கம் இருந்தாலும்
புரிந்து கொள்ளாதவர்களோடு
வாதிட முடியாமல்
சில நேரங்களில்
அமைதியாகத்தான் நாம்
இருக்க வேண்டியுள்ளது.

### மாதங்கி

ஒரு மனிதன் தனது
துயரத்தில் தான்
உண்மையான
மனிதர்களை
அறிகின்றான்.

### ஜெகதீஸ்

உண்மையான உறவுகளுக்கு
விட்டுக்கொடுங்கள் ஏனெனில்
அது பாசம்!!!
உறவெனும் பெயரில் உங்களை
உபயோகப்படுத்திக் கொண்டே
இருப்பவர்களை விட்டு விடுங்கள்
ஏனெனில் அது வேசம்!!!

### லாவண்யா



வெற்றியடையச் சிறந்த வழி...
'மற்றவர்கள் பார்வையில்'
முட்டாளாகத் தெரிய வேண்டும்,
ஆனால் உண்மையில்
புத்திசாலியாக இருக்கவேண்டும்.

### வித்தகன்

உன் மனதில் உள்ள
வார்த்தைகளையும்
கோபத்தில் உள்ள
அன்பையும், யாரால் உணர
முடிகிறதோ!! அவர் தான்
உனக்காக படைக்கப்பட்ட
உயிரான ஒரு உறவு

### விதுஜா

படுத்துக்கொண்டே டிவி பார்க்கும் போது
வாற தூக்கம்...




எழுந்து போய் டிவிய ஓப் பண்ணிட்டு
வந்தா கழுதை எங்க போகுது
என்று தெரியல.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றப்புலனாய்வு திணைக்களத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்






(கொழும்பு)

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்யுமாறு வலியுறுத்தி கோட்டை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் வெளியே பொது மக்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களே கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின்முன்பு நேற்று குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் நுழைவாயில் பகுதியில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, காலிமுகத்திடல் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரணிலுக்கு ஆதரவளிக்க தயார்

## பிள்ளையான் முடிவு

(மட்டக்களப்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நிலைப்பாட்டிலேயே தாம் இருக்கின்றார் என்று தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தாம் அரசுடனேயே இணைந்திருப்பதாகவும் ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், அமைச்சுப் பதவியை ஏற்பதா? இல்லையா? என்பது தொடர்பில் இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## செலவீனங்களை கட்டுப்படுத்த

# உள்ளூராட்சி சபைகளை உடன் கலைக்க கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளை உடனடியாக கலைத்துவிட்டு விசேட ஆணையாளர்களின் கீழ் நியமிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவிலான உறுப்பினர்கள் இருப்பது சுமையாக இருப்பதாக இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் பிரதித் தலைவர் தம்மிக்க முத்துகல தெரிவித்துள்ளார்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் ஒரு வருடத்தினால் நீடிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நீடிப்பு பொருளாதாரத்திற்கு கட்டுப்படியாகக் கூடிய தீர்மானம் அல்ல.

சில மாநகர சபைகளின் மேயர்களின் மாதாந்தச் செலவு ஒரு மில்லியன் ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும், அரசாங்க செலவீனங்களைக் குறைக்கும் வகையில், இவ்வாறான தேவையற்ற செலவீனங்களைக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

## நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

இப்பிரதேசசபையின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்:**

01. இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது.
02. இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்ட வேதனமோ அல்லது படிகளோ கிடையாது.
03. ஆதனவரி அறிவித்தல் படிவங்கள், நிலுவைகளின் பெயரிலான அறிவித்தல் படிவங்களினை வரியிறுப்பாளர்களுக்கு நேரடியாக விநியோகித்தல் வேண்டும்.
04. சபைக்கு வருமதியாகவுள்ள ஆதனவரி நிலுவைகளை உரிய வரியிறுப்பாளர்களிடம் அறவீடு செய்தல்.

**தகைமைகள்:**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 05 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இதனை கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அல்லது நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப் பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
02. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று (07.06.2022) 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லைக்குள் அப்பாற்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
04. விண்ணப்பதாரி நன்நடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
05. ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
06. ஆதனவரி அறிவித்தல் படிவங்களினை மாத்திரம் விநியோகிப்பதாயின் பாதுகாப்பு வைப்பாக ரூபா 5000.00 செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். அறிவித்தல் படிவங்கள் விநியோகிப்பதுடன் ஆதனவரி நிலுவைத் தொகைகளை அறவீடு செய்வதாயின் பாதுகாப்பு வைப்பாக ரூபா 50,000.00 செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை:**

01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன் கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றிற்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை:**

01. கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் விடுமுறை நாட்கள் தவிர்ந்த அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை ரூபா.50/- இனைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.
04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்குப் பின்னராகவோ அல்லது நியமனத்தின் போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
06. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவுத் திகதியான 07.06.2022 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பமுடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

**கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:- கிளிநகரம், கணேசபுரம், உதயநகர், கிருஸ்ணபுரம், பாரதிபுரம், திருவையாறு, கனகாம்பிகைக்குளம் ஆகிய வட்டாரங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வேதனம்**

அறவிடப்படும் ஆதனவரி வருமான நிலுவைத் தொகையின் 10% தரகுப் பணமாக வழங்கப்படும். அத்துடன் விநியோகிக்கப்படும் ஆதனவரி அறிவித்தல் படிவம் ஒன்றிற்கு ரூபா 10 வீதம் வழங்கப்படும்.

**ப.திலீபன்**
**செயலாளர்,**
**கரைச்சி பிரதேசசபை,**
**கிளிநொச்சி.**

(C-4370)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு தட்டுப்பாடு; பொறுமையிழந்த மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தியில் எரிவாயு விநியோக நிலையத்தில் எரிவாயு பெற வந்த பொதுமக்களுக்கும் எரிவாயு விநியோகஸ்தருக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டு கோப்பாய் பொலிஸாரின் தலையீட்டினால்நிலைமை சுமுகமானது.

நேற்று முன்தினம் இரவு பரமேஸ்வரா சந்தி எரிவாயு விநியோகஸ்தரிடம் எரிவாயு வந்திறங்கியதாக பொதுமக்களுக்கு கிடைத்த தகவலை அடுத்து நேற்று அதிகாலை முதல் குறித்த எரிவாயு விநியோக அலுவலகத்திற்கு முன்னால் பொதுமக்கள் எரிவாயு பெறுவதற்கு ஒன்றுகூடி இருந்த நிலையில் எரிவாயு விநியோகஸ்தர் எரிவாயு இல்லை என தெரிவித்த போது பொதுமக்கள் முரண்பாட்டில் ஈடுபட்டனர். அத்தோடு வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் அங்கு கூடியிருந்த பொதுமக்களை விநியோக நிலையத்திற்குள்அழைத்துச்சென்று அங்கு ஏதாவது எரிவாயு கொள்கலன் இருக்கின்றதா என பரிசோதித்த பின் நிலைமை சுமுகமானது.



**நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில்...**



நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் எரிவாயு விநியோகத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்றபோது, திடீரென விநியோக ஏற்பாடுகள் இடைநிறுத் தப்பட்டமையால் குழப்பம் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் வசிக் கும் மக்களுக்கான எரிவாயுவை நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் ஊடாக பங்கீட்டு அட்டை அடிப்படையில் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதனை அறிந்து பெருமளவான மக்கள் வரிசைகளில் நின்று பதிவுகளை மேற்கொள்ள ஆரம்பித்த வேளை திடீரென விநியோக ஏற்பாடுகள் இடை நிறுத்தப்பட்டது.

அதனால் நீண்டநேரம் வரிசையில் நின்ற மக்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டதனை அடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களை சமரசப்படுத்தினர். (4-33)

# திருட்டில் கைதேர்ந்தவர் கையும் மெய்யுமாக பிடிபட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த ஒரு வருட காலத்தில் 6 வீடுகளில் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை பூம்புகார் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தபோது, கடந்த 2021 ஆம் ஆண்டு மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் 6 வீடுகளில் தான் தங்க நகைகள், பணம் என்பவற்றை திருடியதாக தெரிவித்துள்ளார்..

சந்தேக நபரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் ஒரு தொகை நகை மற்றும் பணம் என்பவற்றை மீட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (4-18-33)

## — எரிபொருள் தட்டுப்பாடு —

# பரீட்சைக்கு மாணவர்களை கொண்டு செல்வதில் பெற்றோர்கள் கடும் சிரமம்

(சாவகச்சேரி)

தற்போது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை இடம்பெற்றுவரும் வேளையில் பரீட்சை கடமையில் ஈடுபடும் ஆசிரியர்களின் வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கினால் போதாது பரீட்சை எழுதும் மாணவர்களின் பெற்றோர்களின் வாகனங்களுக்கும் எரிபொருள் நிரப்ப விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகர சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இது தொடர்பாக உறுப்பினர்கள் வலியுறுத்தினர். இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

ஏனைய பிரதேசங்களில் பரீட்சை அனுமதி அட்டையை காண்பிக்கும் போது மாணவர்களின் பெற்றோர்களின் வாகனங்களுக்கும் எரிபொருள் நிரப்பப்படுகிறது.

ஆனால் தென்மராட்சியில் அந்த நிலைமை இல்லை. பரீட்சை அனுமதி அட்டையை காண்பித்து எரிபொருள் கோரும் பெற்றோர்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இவ்விடயங்களை கருத்திற் கொண்டு பரீட்சை எழுதும் மாணவர்களின் பெற்றோருக்கும் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்க பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (4-30)

# குளவிக்கூட்டை அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை



(பொற்பதி)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதான நுழைவாயிலில் உள்ள அரச மரத்தில் இரண்டு பெரிய குழவிக்கூடுகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 1500 வரையான மாணவர்களும் ஆசிரியர் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுமாக 100 இற்கும் மேற்பட்டவர்கள் பணி புரிகின்றனர்.

இதனைவிட இந்த வீதியினால் நாள் ஒன்றிற்கு பல நூற்றுக்கணக்கான வாகனங் களும் பல மக்களும் பயணத்தில் ஈடுபடும் வீதியாக இந்த வீதி காணப்படுகின்றது.

இப்போது மிகவும் அதிக காற்று அடிக்கின்ற காலமாக காணப்படுவதனால் அந்த அரச மரத்தின் மீது உள்ள குளவிகள் கலையுமாக இருந்தால் விளைவுகள் விபரீதமானதாக அமையும் என அப்பகுதி மக்கள் மேலும் தெரிவித்தனர்,

எனவே விளைவுகள் விபரீதமடைவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அனைவரும் கூடிய கவனம் எடுத்து குளவிக்கூட்டை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-64)



இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தில் உயிர்த் தியாகம் செய்த மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதியில் கொத்துக் கொத் தாய் மடிந்த உறவுகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நகரசபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படம்:-சுபேசன்)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

கஞ்சா போதைப்பொருளினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் கச்சாய்ப் பகுதியில் வைத்து நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

உதவி மதுவரி ஆணையாளர் ரொஷான் பெரேராவின் வழிநடத்தலில், சாவகச்சேரி மதுவரித் திணைக்கள மதுவரி பரிசோதகர் வே.ரசிகரன் தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைதான சந்தேக நபரிடம் இருந்து 8 கிராம் கஞ்சா போதைப் பொருளை மீட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சந்தேக நபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியதில் முப்பதாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. (4-30)

# திருநெல்வேலியில் இன்று வயல் விழா

(குப்பிழான்)

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வயல்விழா மஞ்சள் அறுவடையும் பதப்படுத்தலும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி விழாவில் விவசாய மற்றும் கமநல சேவைகள், கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ நெருக்கடியை சமாளிக்க பூரண ஆதரவு; உறுதியளித்தது உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

**இலங்கையின் மருத்துவ நெருக்கடியை சமாளிக்க உலக சுகாதார ஸ்தாபனம் பூரண ஆதரவை வழங்கும் என அந்த ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அலகா சிங் உறுதியளித்தார்.**

அலரிமாளிகையில் நேற்று செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோதே அவர் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய சுகாதாரத் திட்டத்தின் கீழ், ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதத்திற்குள் மருந்துப் பற்றாக்குறையை தீர்க்க முடியும் என்று தான் நம்புவதாக அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.



குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் ஊட்டச்சத்து தேவைகளை மேம்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சோற்றுப்பார்சல் மற்றும் கொத்தின் விலையும் அதிகரித்தது

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக உணவகங்களில் விற்பனை செய்யப்படும் கொத்து மற்றும் சோற்றுப் பார்சலின் பொதி ஒன்றின் விலையை 10 வீதத்தால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



அத்துடன் சோட்டீஸ், பலகாரம் மற்றும் பால் தேநீர் ஆகியவற்றின் விலையில் அதிகரிப்பு ஏற்படாது என உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (நி)


## வாடகைக்கு/ குத்தகைக்கு

**கல்வியங்காட்டில் இயங்கும் சகல வசதிகளுடன் கூடிய திருமண மண்டபம் வாடகைக்கு/ குத்தகைக்கு வழங்கப்படும்.**

(1494)

தொடர்பு- 077 536 0763


# மாலைதீவில் புகலிடம் தேடும் முன்னாள் பிரதமர் மகிந்த



(கொழும்பு)

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீத், இலங்கையின் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தினருக்கு பாதுகாப்பான புகலிடத்தை வழங்க முன்வந்ததாக மாலைதீவின் The Maldives Journal என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

நஷீத் தற்போது இலங்கையில் அரசியல் கட்சி தலைவர்களைச் சந்தித்து வருகிறார்.

இந்த நிலையில், உயர்மட்ட அரசியல் பிரமுகர்களுடன் பல சந்திப்புகளை நடத்தி, ராஜபக்ஷ குடும்பத்தை மாலைதீவுக்கு பாதுகாப்பான வழியில் அனுமதிப்பதற்காக அவர்களை நஷீத் வலியுறுத்தினார் என்று குறித்த சஞ்சிகை தெரிவித்துள்ளது.

தாம் பதவி விலகிய பின்னர், மகிந்த ராஜபக்ஷ நஷீத்தை அழைத்த விடயத்தை, மாலைதீவு அரசாங்கத்தின் மூத்த அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த அழைப்பில், இலங்கையில் நிலைமை சீராகும் வரை தனது குடும்பத்தினர் மாலைதீவில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு நஷீத்திடம் ராஜபக்ஷ கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு சுற்றுலா அதிபரான சம்பா முஹம்மது மூசாவின் இடம் ஒன்றில் மகிந்த தனது குடும்பத்தை குடியமர்த்தும் திட்டத்தை ஆரம்பத்தில் மேற்கொண்டிருந்தார்.

மூசா ஏற்கனவே ராஜபக்ஷக்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா: சூரி 3 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்:A/L ,TO
எதிர்பார்ப்பு:அரச தொழில்
தொ.இ: B/9889

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் : பரணி 3
கி.பா: 32 சூரி 1 செவ் 6 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:Civil Engineer
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ: B/9893

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி 4
கி.பா : 50¾ சூரி 6 செவ் 9 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்:A/L
(சொந்த வியாபாரம்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/9896

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம் 3
கி.பா:11½ சூரி 11 செவ் 10
உயரம்:5'4'
தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: B/9904

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 3
கி.பா: 40½ சூரி 6 செவ் 3 இல்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்:MBA,BBA
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ:G/9426

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: சூரி 11 செவ் 12 இல்
உயரம்:156 cm
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/9885

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1
கி.பா:25 சூரி 3செவ் 2 இல்
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: BSc (ஆசிரியர்)
எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்
தொ.இ:G/9897

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்:பூரம் 1
கி.பா:29¼ சூரி 10 செவ் 5 இல்
உயரம்:155 cm
தகைமை/தொழில்:பட்டதாரி அரச தொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி விரும்பத்தக்கது
தொ.இ:G/9901

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## யா/நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்று கூடலும் மதிய போசன விருந்தும்

திகதி :- 04.06.2022 சனிக்கிழமை
நேரம் :- காலை 10.00 மணி
இடம் :- பாடசாலை மண்டபம்

ஐரோப்பிய பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு.ஜெரமி மரியநாயகம் நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய பழைய மாணவர்களை சந்தித்து பாடசாலையின் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாட விரும்புகின்றார்.அனைவரையும் இந் நிகழ்வில் பங்கு பற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பங்கு பற்ற விரும்பும் பழைய மாணவர்கள் 01.06.2022 ஆம் திகதிக்கு முன்பாக பழைய மாணவர் சங்க உப செயலாளர் திரு. S. காந்தசீலன் (077 444 6494) பொருளாளர் திரு.சி.புஸ்பராசா (077 600 3484) ஆகியோருடன் தொடர்பு கொண்டு வருகை தருவதை உறுதிப்படுத்தவும்.

(1493)

திரு.S.காந்தசீலன்
உபசெயலாளர்

திரு.கு.விமலன்
தலைவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 54

### முதலாளியை விஞ்சிய தொழிலாளி



இலங்கையில் இருந்து கனடா நாட்டிலுள்ள வாங் கோவேர் நகரத்துக்குச் சென்ற ஒரு திறமையான இளைஞன்,

அங்குள்ள மிகப் பெரிய சூப்பர் மார்க்கெட்டுக்குச் சென்று அதன் முதலாளி யைச் சந்தித்து, தனக்கு ஒரு விற்பனையாளர் வேலை தருமாறு கேட்டான். இந்தியாவில் ஏற்கெனவே விற்பனையாளராகப் பணிபுரிந்த அனுபவம் உண்டென்றும் சொன்னான்.

அவனது தோற்றத்தால் கவரப்பட்ட முதலாளி அவனை வேலையில் அமர்த்திக் கொண்டார்.

குண்டூசி முதல் வானூர்தி வரை கிடைக்கும் சூப்பர் மார்க்கெட் அது.

முதல் நாளன்று அவனுக்கு மிகவும் கடுமையான வேலை.

மாலையில் பணி முடிந்ததும் அவனை வரவழைத்த முதலாளி கேட்டார், “இன்று உன்னால் எத்தனை வாடிக்கையாளருக்கு விற்பனை செய்ய முடிந்தது”.

இளைஞன், ஒருவருக்கு விற்பனை செய்ததாக சொன்னான்.

முதலாளிக்கு கோபம் வந்து விட்டது.

“இங்கே சராசரியாக ஒவ்வொரு விற்பனையாளரும், இருபது வாடிக்கையாளர்களுக்குப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும். விரைவில் உன்னுடைய விற்பனையை அதிகரிக்காவிட்டால், உன் வேலை பறிபோய் விடும்" என்று எச்சரித்தார்.

“சரி, அந்த ஒரு வாடிக்கையாளருக்கு எத்தனை பவுண்டுக்கு விற்பனை செய்தாய்?" இளைஞன் சொன்னான்,

“933005 கனேடியன் டொலர்" அதிர்ச்சியடைந்த முதலாளி, “அப்படி என்ன விற்றாய்" வாடிக்கையாளருக்கு ஒரு மீன் பிடிக்கும் முள், தூண்டில் மற்றும் அதற்குத் தேவையான பொருட்களை விற்றேன்."

“ஆனால், அவற்றின் விலை இவ்வளவு இல்லையே?" என்றார் முதலாளி.

“உண்மைதான். இவற்றை அவர் வாங்கிய பின், கடலில் சென்று மீன் பிடிக்கப் படகு இருக்கிறதா என்று கேட்டேன். அவர் இல்லை என்றதால், நமது படகுப் பிரிவுக்கு அழைத்துச் சென்று காட்டி, ஓர் இருபது அடி நீளப்படகை விற்றேன்.

இந்த நீளமான படகை எப்படி எடுத்துச் செல்வீர்கள் என்றதற்கு, அவரிடம் அவ்வளவு பெரிய கார் இல்லாததால், ஒரு டீலக்ஸ் 4 X 4 ப்ளாஸர் வோல்க்ஸ்வேகன் காரையும் விற்றேன். நடுவே ஓய்வில் அவருக்குத் தங்க இடம் இல்லாததால், மிகப்பெரிய டென்ட் ஒன்றையும் விற்றேன்"

“அவர் இவ்வளவையும் வாங்கவா உன்னிடம் வந்தார்?" நம்ப முடியாத முதலாளி கேட்டார்.

“இல்லை, அவர், தனக்குத் தலை வலிப்பதாகவும், ஒரு தலைவலி மாத்திரை வாங்க வந்ததாகவும்தான் சொன்னார். நான்தான், தலைவலிக்கு நல்ல மருந்து, இந்த மீன் பிடிக்கும் பொழுது போக்கு என்று சொன்னேன்."

முதலாளி கேட்டார், “ஆமாம், இலங்கையில் நீ எங்கு வேலை செய்தேன் என்று சொன்னாய் ?"

“அங்கு தனியார் மருத்துவமனையில் மாஸ்டர் செக்கப் பிரிவு ஆலோசகராக இருந்தேன்."

“இங்கே வா, என் நாற்காலியில் அமர்ந்து இந்தக் கடையைப் பார்த்துக் கொள், நான் கொஞ்ச நாள் அங்கு சென்று வேலை பார்த்து விட்டு வருகிறேன்" என அந்த முதலாளி தெரிவித்தார்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் “முகநூல் தரிசனம்” பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## இந்தியா பங்களாதேஷ் கூட்டுப்பயிற்சி ஆரம்பம்

(டில்லி)

இந்திய மற்றும் பங்களாதேஷ் கடற்படைகளுக்கு இடையிலான ஒருங்கிணைந்த 4 ஆவது கூட்டுப்பயிற்சி 4 ஆவது தடவையாகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையின் உள்நாட்டு போர்க்கப்பல்களான ஐ.என்.எஸ் கோரா மற்றும் ஐ.என்.எஸ் சுமேதா மற்றும் பங்களாதேஷ் கடற்படையின் போர்க்கப்பல்களான பி.என்.எஸ் அலி ஹைதர் மற்றும் பி.என்.எஸ் அபு உபைதா ஆகியவை ரோந்து பணிகளில் ஈடுபடுகின்றன.

அதே போன்று இரு கடற்படைகளின் கடல்சார் ரோந்து விமானங்களும் சர்வதேச கடல் எல்லைக் கோட்டில் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தாய்வான... அமெரிக்...

### அமெரிக்க ஜன...

(வோஷிங்டன்)
தாய்வானை ஆக்கி...
தலையிடும் என அமெ...

ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடாவுடன் நேற்று முன்தினம் கூட்டாக டோக்கியோவில் செய்தியாளர்களை பைடன் சந்தித்தார். இதன்போது உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது போன்று தாய்வான் மீது சீனா படையெடுத்தால் அமெரிக்கா தாய்வானுக்கு உதவுமா? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா இராணுவ நடவடிக்கையில் நேரடியாக ஈடுபடவில்லை. இந்நிலையில்...


## தாய்வானை தாக்க 1.40... இராணுவ வீரர்கள் தயார்

### சீன ஜனாதிபதியின் ஒடியோ வெளியான...

(பீஜிங்)

1.40 லட்சம் இராணுவ வீரர்கள், 953 கப்பல்களை தயார்படுத்துமாறு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் பேசிய ஓடியோ...

## இராணுவ உயர் அதிகாரியின் உடலை சுமந்து சென்று அடக்கம் செய்த கிம்



(பியாங்யாங்)

வடகொரியாவில் உடல்நலக்குறைவால் உயிரிழந்த இராணுவ உயர் அதிகாரியின் உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டியை அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன் சுமந்து செல்லும் காட்சி வெளியாகி உள்ளது.

உயிரிழந்த இராணுவ அதிகாரி ஹியோன் சோல் ஹேயின் இறுதி சடங்குகள் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அப்போது அவரது உடல் வைக்கப்பட்ட சவப்பெட்டியை சுமந்து சென்ற ஜனாதிபதி கிம் ஜாங் உன், பின்னர் தனது கைகளால் மணலை அள்ளி சவக்குழிக்குள் கொட்டினார்.

2011 ஆம் ஆண்டு தனது தந்தை உயிரிழந்ததற்கு பிறகு கிம் ஜாங் உன் ஒருவரின் இறுதி சடங்கில் கலந்து கொள்வது இதுவே முதல் முறையாகும். (நி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு

# னை ஆக்கிரமிக்க சீனா முயன்றால்
# ்கா இராணுவ ரீதியாக தலையிடும்!

## ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை

**ஆக்கிரமிக்க சீனா முயன்றால் அமெரிக்கா இராணுவ ரீதியாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார்.**



தாய்வான் மீது சீனா படையெடுத்தால் தாய்வானை பாதுகாக்க நேரடி இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கா ஈடுபடுமா எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு ஆம் என பைடன் பதிலளித்தார். ஒரே சீனா என்ற கொள்கையுடன் நாங்கள் உடன்படுகிறோம். நாங்கள் அதில் கையெழுத்திட்டோம். ஆனால் தாய்வானை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்தால் இந்த ஒப்பந்தம் வலுவாக இருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு போரைத் தொடங்கிய பின்னர் தாய்வானை பாதுகாக்கும் தேவை இன்றும் அதிகமாக உள்ளது எனவும் பைடன் குறிப்பிட்டார்.

தாய்வானுக்கு எதிராக படைபலத்தைப் பயன்படுத்த சீனா எடுக்கும் எந்த முயற்சியும் பொருத்தமானதாக இருக்காது. அது ஒட்டுமொத்த பிராந்தியத்தையும் பாதிக்கும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போன்ற மற்றொரு நடவடிக்கையாகத்தான் அது இருக்கும் எனவும் பைடன் தெரிவித்தார்.

தாய்வான் சீனாவின் ஒரு பகுதி என சீன அரசு தொடர்ந்து கூறி வருகிறது. தாய்வானியர்களின் விருப்பத்துக்கு மாறாக தாய்வானை தனது நாட்டுடன் இணைக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சீனா மேற்கொண்டு வருகிறது.

தேவைப்பட்டால் இராணுவ பலத்தைப் பயன்படுத்தி தாய்வானை சீனாவுடன் இணைப்போம் என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் முன்னர் பல தடவைகள் கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையிலேயே தாய்வானை பாதுகாக்க இராணுவ ரீதியாக அமெரிக்கா தலையிடும் என்று பைடன் கூறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## 40 லட்சம்
## ர் நிலையில்
### னதால் பரபரப்பு



சீனாவில் வெளியானதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தாய்வான் மீது சீனா படையெடுப்பு நடத்துமோ என்ற அச்சம் தாய்வான் மக்களிடையே நிலவி வருகிறது.

சீனாவில் கடந்த 1949 இல் நடைபெற்ற உள்நாட்டு போருக்கு பிறகு தாய்வான் தனி நாடாக உருவானது. ஆனாலும் தாய்வான் தங்கள் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என ஜனாதிபதி ஜி ஜின்பிங் தலைமையிலான சீன அரசு கூறி வருகிறது.

அதுமட்டுமன்றி தேவை ஏற்பட்டால் தாய்வானை கைப்பற்ற, படைபலத்தை பயன்படுத்த தயங்கமாட்டோம் எனவும் சீனா அடிக்கடி கூறி வருகிறது. மேலும், தாய்வானின் வான் எல்லைக்குள் அவ்வப்போது சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்து மிரட்டல் விடுப்பதை வழக்கமாக கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. (நி)

## ரஷ்யாவுடன் புரிந்துணர்வுக்கு இடமில்லை
### ஜெலன்ஸ்கி அதிரடி அறிவிப்பு

(கீவ்)

உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டு வரும் போர் நடவடிக்கை 89 ஆவது நாளாக தொடர்கிறது.

இந்நிலையில் இரு தரப்பினரும் தீவிர தாக்குதல்களை மேற்கொண்டு வரும் நிலையில் உக்ரைனின் மயுரிபோல் நகரை ரஷ்யா கைப்பற்றியுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.



இவ்வாறான நிலையில் தற்போது சுவிஸ்லாந்து டாவோ நகரில் நடைபெற்று வரும் உலக பொருளாதார அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி,

"ரஷ்யாவிற்கு எதிராக அனைத்து விதமான தடைகளையும் மேற்கு உள்ளிட்ட அனைத்து நாடுகளும் பிரயோகிக்க வேண்டும். எண்ணெய், நிதிப்பரிமாற்றம் மற்றும் சர்வதேச வர்த்தக பரிமாற்றங்கள் போன்றவற்றை நிறுத்தி ரஷ்யாவிற்கு பொருளாதார இறுக்கத்தை ஏற்படுத்த வேண்டும். வீணான மற்றும் அப்பாவிகளின் உயிர்களை உக்ரைன் நிலப்பரப்பில் அழித்துக் கொண்டு வருகின்றது ரஷ்யா.

இனி ரஷ்யாவுடன் புரிந்துணர்வுக்கு இடமில்லை. போராடி வெல்வதே எமக்கு இருக்கும் ஒரே வழி.

எனவே இப்போராட்டத்தை வெல்வதற்கு அனைவரும் எமக்கு உதவி செய்ய வேண்டும். போர் வீரர்கள், இராணுவ தளபாட உதவி உட்பட அனைத்து வழிகளிலும் எமக்கு உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்" என ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். (நி)


## 10 மாடிக்கட்டடம் இடிந்து விழுந்து

- ஐவர் பலி
- 27 பேர் காயம்
- 80 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கினர்

### ஈரானில் துயரம்

(டெஹ்ரான்)

ஈரான் தெற்கு நகரமான அபாடானில் 10 மாடி கட்டடம் பகுதியளவில் இடிந்து விழுந்ததில் 5 பேர் பலியாகினர். 27 பேர் காயமடைந்தனர். அத்துடன், சுமார் 80 பேர் வரையில் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கிய நிலையில் அவர்களை மீட்க மீட்புக் குழுவினர் போராடி வருகின்றனர்.




ஈராக்கின் எல்லைக்கு அருகில் உள்ள அமீர் கபீர் தெருவில் உள்ள மாடிக் கட்டடமே நேற்று முன்தினம் இடிந்து விழுந்ததாக ஈரான் செய்திச் சேவையான மெஹர் தெரிவித்துள்ளது.

மீட்பு நடவடிக்கைக்கு உதவ ஏனைய நகரங்களில் இருந்து அவசர குழுக்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும், இரண்டு மோப்ப நாய்கள், ஒரு ஹெலிகொப்டர் மற்றும் ஏழு மீட்பு வாகனங்கள் ஏற்கனவே சம்பவ இடத்தில் இருப்பதாகவும் மெஹர் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மருத்துவமனைக்கு மருந்துப் பொருட்கள் கையளிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா பொது மருத்துவமனை பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக வவுனியா பொது மருத்துவமனை நோயாளர் நலன்புரி சங்கத்தினால் ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருத்துவமனையில் மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியா மருத்துவமனைக்கு உடனடித் தேவையாக உள்ள ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான கண் சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருந்துப் பொருட்கள் நோயாளர் நலன்புரி சங்கத்தின் நிர்வாகத்தினரால் பணிப்பாளரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (4-299)

# புத்தக அரங்க விழா

(கிளிநொச்சி)

தேசிய கலை இலக்கியப் பேரவை கிளிநொச்சி மாவட்ட மக்கள், அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுக்கும் "நூறு மலர்கள் மலரட்டும்" புத்தக அரங்க விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை , சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, புத்தக அரங்க விழாவின் ஒரு பகுதியாக சனிக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 8.30 மணிவரையும், ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரையும் தமிழில் அண்மையில் வெளிவந்த அநேக நூல்கள், சஞ்சிகைகளுடன் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நடைபெறும் எனவும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-18)

# எரிவாயு பெறச்சென்ற மக்களுக்கு ஏமாற்றம்

(குருமன்காடு)

சமையல் எரிவாயு பெறுவதற்காக வவுனியாவில் இருந்து பூனாவ சென்று நீண்ட நேரம் காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் அனைத்து குடும்பங்களுக்கும் எரிவாயு வழங்கும் வகையில் முகவர்கள் ஊடாக சமையல் எரிவாயு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில், வவுனியாவிற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டுவரப்பட்ட எரிவாயுவினை திட்டமிட்டபடி மக்களுக்கு சீராக வழங்க முடியாதபடி குட்செட் வீதியில் ஒரு பகுதி மக்கள் எரிவாயு வாகனத்தினை மறித்து குழப்பம் விளைவித்து எரிவாயுவைப் பெற்றிருந்தனர்.

இதனையடுத்து, எரிவாயுவை தமது கண்காணிப்பின் கீழ் வழங்கும் முயற்சியை வவுனியா பிரதேச செயலகம் இடை நிறுத்தியுள்ளதுடன், எரிவாயு நிறுவனமும் வவுனியாவிற்கு வர முடியாது எனவும் பூனாவ பகுதிக்கு வந்து எரிவாயுவைப் பெற்றுச் செல்லுமாறு கூறியிருந்ததது.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பூனாவ பகுதிக்கு எரிவாயுவைப் பெற வவுனியாவில் இருந்து 300 இற்கும் மேற்பட்டோர் சென்ற நிலையில் 150 பேருக்கு எரிவாயு வழங்குவதற்கான நம்பர் வழங்கப்பட்டது. ஆனாலும், மதியத்திற்கு பின்னர் எரிவாயு இல்லை என தெரிவித்து அங்கு நின்ற 300 இற்கும் மேற்பட்ட மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். (4-250)

# சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான சுபகிருது வருஷ மஹோற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

18 தினங்கள் நடைபெறவுள்ள இவ் ஆலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலயதர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (4)

# எரிபொருள் விநியோக சீரின்மையால் இ.போ.ச.ஊழியர்கள் பாதிப்பு

(நெளுக்குளம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இ.போ.ச.சாலையின் ஊழியர்கள் தமது கடமைகளுக்கு சரியான நேரத்திற்கு செல்ல முடியவில்லை.

இதனால் தற்போது பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமக்கான எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை உரிய முறையில் பெற்றுக்கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்க வடமாகாண இணைப்பாளர் ந.கோபிகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

எமது சாலைகளுக்கு இன்று, நாளை எரிபொருட்களை வழங்குவதாக தெரிவிக்கப்படுகின்றதே தவிர எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதனால் அத்தியாசிய சேவையை வழங்கும் நாங்கள் எரிபொருள்களை உரிய முறையில் பெற்றுக் கொண்டு சேவையை முன்னெடுக்க முடியவில்லை. இதனால் தற்போது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உட்பட அரச சேவையை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்கள் பலர் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே இதனை கருத்திற்கொண்டு இ.போ.ச.சாலை உத்தியோகத்தகள், சாரதிகள், காப்பாளர்கள் அனைவருக்கும் உரிய நேரத்திற்கு எரிபொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மேலும் தெரிவித்துள்ளார். (4-299)

# இராசிபலன்

25.05.2022
வைகாசி 11, புதன்கிழமை
தசமி பிற்பகல் 2.32 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 2.42 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை

சந்திராஷ்டமம் - மகம்

வளவன்


மேஷம்
வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.


கடகம்
மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பயணங்கள் கைகூடும்.


துலாம்
நன்மைகள் நடைபெறும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.


மகரம்
பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவிகள் நாடி வரலாம், சகோதர வழியில் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.


ரிஷபம்
குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், செல்வாக்கு மேலோங்கும் நாள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.


சிம்மம்
வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், உடல் நலனில் கவனம் தேவை, உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.


விருச்சிகம்
மனதில் இனம்புரியாத சந்தோசம் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும்.


கும்பம்
ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.


மிதுனம்
தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


கன்னி
குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் [illegible]


தனுசு
சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், நண்பர்களால் [illegible] நடைபெறலாம்.


மீனம்
திட்டமிட்ட காரியம் ஒன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

உடல் வேதனையை விட மன வேதனை மோசமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எரிவாயு லொறியை மறித்து மக்கள் போராட்டம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் எரிவாயுவிற்காக காத்திருந்த மக்கள் நேற்று எரிவாயு லொறியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

எரிவாயுவிற்காக காத்திருந்த பாவனையாளர்களில் 250 பேருக்கு மட்டும் எரிவாயு வழங்கிவிட்டுச் செல்ல முற்பட்ட லொறியை எரிவாயுவை பெறுவதற்காக வரிசையில் காத்திருந்து அதனை பெறாத பாவனையாளர்கள் லொறியை மறித்து தமக்கு எப்போது எரிவாயு தரப்படும் என உறுதிப்படுத்துமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரிடம் ஆர்ப்பாட்டகாரர்கள் எரிவாயு எப்போது தரப்படும் எனவும், வரிசையில் காத்திருந்தவர்களுக்கு இலக்கம் வழங்குமாறும் கோரியும் லொறியை செல்லவிடாது சுற்றிவளைத்து இருந்தனர். இதனைத் தொடர்ந்து பொலிஸார் எரிவாயு முகவருடன் பேசி புதன்கிழமை எரிவாயு தருவதாகவும் அதற்காக வரிசையில் நிற்பவர்களுக்கு இலக்கங்கள் முகவர்களால் தரப்படும் என தலையீடு செய்து உறுதிமொழி வழங்கியதையடுத்து லொறியை அங்கிருந்து செல்ல ஆர்ப்பாட்டகாரர்கள் அனுமதியளித்துள்ளனர். (நி)

# உர மோசடியில் ஈடுபட்டவர் மாட்டினார்

(கொழும்பு)


இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த உரத்தினை ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்ததாகக் குறிப்பிட்டு மோசடியில் ஈடுபட்ட வர்த்தகர் ஒருவரின் உரக்களஞ்சியசாலை நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

கல்முனை - சாய்ந்தமருது பிரதேசத்தில் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது. ட்ரக்டர் வாகனத்தின் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நபரொருவரே இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபர் பொரலஸ்கமுவ - பிரிவன சந்திக்கருகில் நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து 50,000 ரூபாய் வாடகைக்கு கட்டடமொன்றைப் பெற்று அதில் இவ்வாறு உரத்தினைக் களஞ்சியப்படுத்தி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த உரத்தினை, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்த உரத்தினைப் போன்று காண்பிக்கும் வகையில் புதிய பைகளில் பொதியிட்டு அவர் மோசடி செய்துள்ளார். இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினர் குறித்த களஞ்சியசாலையை சுற்றி வளைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முயன்ற குழந்தைகள் உட்பட 67 பேர் கைது

(திருமலை)

திருகோணமலை சாம்பல் தீவு, சல்லி பிரதேசத்தில் இருந்து வெளிநாடு ஒன்றுக்கு சட்டவிரோதமாக செல்லமுற்பட்ட 67 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் எந்த நாட்டுக்கு செல்ல முயற்சித்தனர் என்று தகவல்கள் வெளியாகவில்லை. கைது செய்யப்பட்டவர்களில் 7 பெண்கள், 3 சிறுவர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்கள், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை, இரத்தினபுரி, கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின்போது, குறித்த பயணத்துக்காக பயன்படுத்தப்பட்ட 3 முச்சக்கரவண்டிகள், ஒரு கெப் வாகனம், ஒரு வான் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. பொருளாதார சுமை காரணமாக ஏற்கனவே இலங்கையின் வடக்கில் இருந்து பலர் இந்தியாவுக்கு கடல் வழியாக சட்டவிரோதமாக சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# எரிபொருள் கொள்வனவு தொடர்பில் ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை

## காஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

எரிபொருள் கொள்வனவு தொடர்பாக ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் ஆனால் ரஷ்யாவிடம் இருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை எனவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் பேசியதாக அமைச்சர் தெரிவித்தார். (நி)

# எரிபொருளுக்காக 500 மில். கடன் இந்தியாவிடம் கையேந்தும் இலங்கை

(கொழும்பு)

இந்தியன் எக்ஸிம் வங்கியின் ஊடாக 500 மில்லியன் டொலரை கடனாக பெற்றுக் கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனில் எரிபொருட்களை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)

சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்துள்ளதாக சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார ச்சபை தெரிவித்துள்ளது. மார்ச் மாதத்திற்குப் பின்னர் நாட்டில் அமைதி காணாமல் போயுள்ள நிலையில், வெளிநாட்டவர்கள் மத்தியில் இலங்கை தொடர்பில் எதிர்மறையான விம்பத்தை ஏற்படுத்தியமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது. எனவே ஓகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் இலங்கைக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவது அவசியமானது என சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கை வரலாற்றில் பதிவான அதியுச்ச பணவீக்கம்

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் கடந்த 42 வருடங்களில் முதன் முறையாக வரலாற்று ரீதியாக அதிகரித்துள்ளது. இலங்கையின் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையின் படி, நாடு தழுவிய பணவீக்கம் கடந்த மாதம் அதன் அதிகபட்ச உச்சமான 33.80 சதவீதத்தை எட்டியுள்ளது.

இதற்கு முன்னர் பணவீக்க வரலாற்றில் 1980 ஆம் ஆண்டு 32.50 சதவீதமாக அமைந்திருந்தது. 1980 ஆம் ஆண்டு பல பில்லியன் ரூபாய்கள் முடக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாகவே பணவீக்கம் அதிகரித்தது.

இந்தநிலையில் தற்போதைய பணவீக்கம், அதிகரித்த உணவுப் பணவீக்கத்தால் ஏற்பட்டுள்ளது.

இது கடந்த ஏப்ரல் முதல் ஏழு மாதங்களுக்கு இரசாயன உரங்களைத் தடை செய்த அரசாங்கக் கொள்கையால் ஏற்பட்டதாகும். இதற்கிடையில், உணவு அல்லாத பணவீக்கமும் கிட்டத்தட்ட 14 ஆண்டு வரலாற்றுப்பதிவை முறியடித்துள்ளது.

கடந்த மாதம் இந்தப் பணவீக்கம் 23.9 சதவீதமாக அதிகரித்தது. 2008 நவம்பரில் இது 16.8 சதவீதமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 380 | 250 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 350 |
| தக்காளி | 800 | 900 | 800 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 220 | 150 | 140 |
| கோவா | 250 | 220 | 240 | 250 |
| கரட் | 200 | 340 | 400 | 400 |
| பூசணி | 140 | 120 | 100 | 120 |
| புடோல் | 250 | 210 | 240 | 250 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 200 |
| பாகற்காய் | 650 | 700 | 800 | 600 |
| வெண்டைக்காய் | 160 | 160 | 160 | 350 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 140 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 400 | 120 |
| லீக்ஸ் | 220 | 230 | 240 | 250 |
| பீற்றூட் | 380 | 400 | — | 400 |
| கறிமிளகாய் | 600 | 380 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1400 | 2000 | 1200 | 1200 |
| போஞ்சி | 450 | 650 | — | 500 |
| கத்தரிதம்புள்ள | 350 | 150 | — | 350 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 150 | 150 |
| தேசிக்காய் | 600 | 400 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 180 | 140 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 200 | — | 250 |
| பொன்னாங்கண்ணி | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 70 | 50 | 40 |
| ஈரப்பலா | — | — | — | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## வேண்டவே வேண்டாம்!



(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது வேலு "லட்சுமி! ஓடிப் போன உன் கணவனைப் பட்டணத்தில் என் மச்சான் பார்த்துப் பேசினானாம்" எனவே அவள் "அப்படியா! வா வெளியே போய் பேசலாம் மாப்பிள்ளை ஐயா இங்கேயே இருக்கட்டும்" என்றாள்.

வேலுவும் மகாலிங்கத்திற்கு ஜாடை காட்டி விட்டு லட்சுமியுடன் வெளியே சென்றான். அவர்கள் போனதும் மகாலிங்கம் சமையலறைக்குப் போய் பரண் மீதிருந்த ஜாடிக்குள் கைவிட்டு கைக்குக் கிடைத்த உருண்டைகளை எடுத்து மேல் துண்டின் நுனியில் வைத்து முடிந்து கொண்டான். பிறகு மறுபடியும் கைவிட்டு அவன் ஒரு உருண்டை எடுத்து வெல்லச் சீடை என்று நினைத்து சட்டென வாயில் போட்டுக் கொண்டான். அப்போது அவனது வாயில் எரிச்சல் கண்டதோடு செவ் வெறும்புகள் வேறு கடிக்கலாயின. கைகளிலும் செவ்வெறும்புகள். அவன் எண்ணியது போல ஜாடியில் வெல்லச் சீடைகள் இருக்கவில்லை. இருந்தவை புண்ணாக்கு உருண்டைகளே. முகமெல்லாம் செவ்வெறும்புகள் கடிக்கவே மகாலிங்கம் வீட்டின் பின்புறம் ஓடினான். வலியோ தாங்க முடியவில்லை. கத்தவோ அழவோ முடியாமல் மதில் சுவர் ஏறி மறுபுறம் குதித்தான். அப்போது வேலு அங்கு நின்று கொண்டிருந்தான்.



அவன் மகாலிங்கத்திடம் "என்ன ஐயா! லட்சுமியிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட ஓடி வந்து விட்டீர்களே" என்று கேட்கவே அவனும் "கத்தாதே எல்லாம் அப்புறம் சொல்கிறேன். இப்போதே இங்கிருந்து போய் விட வேண்டும் ஆனால் இதை யாரிடமும் சொல்லி விடாதே" எனக் கூறி பத்து ரூபாவை வேலுவின் கையில் திணித்து விட்டு ஓடினான். மாமியார் வீட்டை அடைந்த மகாலிங்கம் மங்களத்திடம் "அத்தை! இனி வெல்லச் சீடையே வேண்டாம்.

நான் எண்ணெயிலோ நெய்யிலோ செய்த எதையுமே சாப்பிடக் கூடாதென்று வைத்தியர் சொன்னார். நாளை காலையிலே ஊருக்குக் கிளம்புகிறேன்" என்றான். மறுநாள் அவன் தன் மனைவியோடு தன் ஊருக்குப் புறப்பட்டும் போய் விட்டான். மங்களம் திகைத்ததோடு சந்தோசமும் அடைந்தாள்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




"தான் காற்றின் மைந்தன் என்பதால் தன்னை உபசரிக்கக் கடலுள் மறைந்திருந்த மைந்நாக மலை மேல் எழுந்தது" என்பதை அறிந்தான் அனுமன்.

"நன்றி; நான் உல்லாசப் பயணம் மேற்கொண்டு உலகம் சுற்றச் செல்லவில்லை; கடமை எனக்குக் காத்திருக்கிறது; கடலைக் கடந்து காகுத்தன் துணைவியைக் காண வேண்டும்; வேகமாகச் செல்கிறேன்; வழிவிடு" என்றான்.

அதன் வேண்டுகோளை ஏற்றுத் திரும்பி வரும் பொழுது தங்குவதாய்த் தெரிவித்தான். நந்தனுக்கு வழிவிட்ட நந்தியாய் அது வழிவிட்டுக் கடலுள் ஆழ்ந்தது.

**சுரசை தடுத்தல்**

அனுமன் ஆரணங்கினைக் கண்டு அறி யக் கடலைக் கடக்கும் ஆற்றலும், அரக்கரை எதிர்க்கும் வீரமும் உள்ளனவா? என்று அறிய விண்ணிடை வாழும் தேவர் விரும்பினர். அதற்காகச் சுரசை என்ற அரமகள் ஒருத்தியை அரக்கி வடிவில் அவன் முன் அனுப்பி வைத்தனர். அவள் கடற் புயலை முன்னின்று தடுக்கும் பெருமலை போலக் குறுக்கே நின்றான்.

"அஞ்சனை மகனே! அரக்கி மகள் நான்; கோரப் பசியால் சோர்வுற்று இருக்கிறேன்; உன்னைத் தின்று சுவை காண விழைகிறேன்" என்றாள். பேருருவம் கொண்டு இடைமறித்த அவள், அங்காந்து நிற்க அவள் வாயில் புகுந்து வெளியேறினான்; உருவத்தைச் சுருக்கி, வாயுள்ளே புகுந்து வெளியே வந்து பிறகு உடம்பைப் பெருக்கிக் கொண்டான்; பேருருவம் படைத்த அவன், சிற்றுருவம் படைக்கவும் வல்லன் என்பதைக் காட்டினான்.

**அங்கார தாரகை**

அடுத்து அவனைத் தடுத்து நிறுத்தினாள் அங்கார தாரகை என்னும் அரக்கி ஒருத்தி; அவளைக் கண்டு அவன் இரக்கம் காட்டவில்லை; அவன் வாயுள் புகுந்து வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தான்; அவன் பறக்கும் காற்றாடியானான்; அவனைத் தொடர்ந்து நூலாக அவள் குடல் பின் தொடர்ந்தது.

தடைகள் மூன்றும் அவனிடம் விடை பெற்றுக் கொண்டன. கடலைக் கடந்த அவன் கால்கள் பவள மலையில் பதிவு செய்தன; அம் மலை இலங்கையின் எல்லையில் இருந்தது.

**காவல் தெய்வம்**

காவல் தெய்வம் ஒருத்தி இராவணன் ஏவலை ஏற்று அங்கு நின்று தடுத்தாள்.

"பொழில் சூழ்ந்த கடலை உடைய இலங்கையில் உனக்கு என்ன வேலை?" என்று கேட்டான். "காலை, மாலை இங்கு நீ காவல் நிற்பது ஏன்?" என்று கேட்டான்.

"அது என் கடமை; நான் காவல் தெய்வம்; நீ இதைக் கடக்க முடியாது" என்றாள். இருவரும் கை கலந்தனர். அவன் அவள் தாக்க அவள் அழகிய பெண்ணாய் அவன் முன் நின்றாள். "கண்ணைப் பறிக்கும் அழகுடைய பெண்ணே நீ யார்?" என்றான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii:lk

## பங்கீட்டு நடைமுறையை முறையாகப் பின்பற்றுங்கள்

பொருட் தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றபோது பங்கீட்டு அடிப்படையில் அவற்றை வழங்குவதுதான் ஒரே வழி.

இவ்வாறு பங்கீட்டு அடிப்படையில் பொருட்களை வழங்கி எல்லோருக்கும் அந்தப் பொருட்கள் சென்றடைவதனைச் சிறப்பாகச் செய்த அனுபவம் நம் தமிழ் மண்ணுக்கு நிறையவே உண்டு.

ஆம் யுத்தம், பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தாமதம் என்பன ஏற்பட்டிருந்த காலங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் குடும்பப் பதிவு அட்டையின் அடிப்படையில் பொருட் பங்கீடுகள் மிகச் சிறப்பாக நடந்தன.

இதனால் ஏழை, பணக்காரர், செல்வாக்குடையவர் என்ற ஏற்றத்தாழ்வுகள் ஏதுமின்றி, கிடைத்த பொருட்கள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பங்கீடு செய்யப்பட்டன.

ஆனால் இன்றைய பொருளாதார நெருக்கடியின்போது பங்கீட்டு நடைமுறை இம்மியும் பின்பற்றப்படாமல் இருப்பதுதான் விசித்திரமும் வேதனையுமாகும்.

உதாரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிவாயு சிலிண்டர்கள் கிடைக்கும்போது அதனைச் சரியான பங்கீட்டு முறைமையின் கீழ் வழங்குகின்ற ஏற்பாடுகள் இருக்க வேண்டும்.

குறிப்பாக குடும்ப அட்டையில் திகதியிட்டு எரிவாயு சிலிண்டர் வழங்கப்பட்டமை பதிவிடப்படும்போது, முதற் கட்டத்தில் எரிவாயு கிடைக்காதவர்களுக்கு இரண்டாம், மூன்றாம் கட்டங்களில் எரிவாயு கிடைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும்.

ஆனால் இங்கு அந்த நடைமுறைகள் எதுவுமின்றி நீண்டவரிசையில் காத்து நின்று எரிவாயுவைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறை காரணமாக வரிசையில் காத்து நிற்கக் கூடியவர்களில் ஒரு பகுதியினருக்கு மட்டும் எரிவாயு கிடைக்க, ஏனையவர்கள் ஏமாந்து போகின்ற நிலைமை ஏற்படுகிறது.

தவிர, இந்த நடைமுறை காரணமாக இரண்டாம், மூன்றாம் கட்டங்களில் வழங்கப்படுகின்ற எரிவாயுவையும் ஏலவே பெற்றுக் கொண்டவர்கள் மீளவும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு.

இவை ஒருபுறமிருக்க, சரியான பங்கீட்டு நடைமுறை இன்மையால் எரிவாயு முகவர்களும் (விநியோகஸ்தர்கள்) துணை முகவர்களும் எரிவாயுவைப் பதுக்கிக் கொள்ளை இலாபம் ஈட்டுகின்ற துரோகத்தனத்தைச் செய்ய முற்படுவர்.

ஆகவே எரிவாயு, மண்ணெண்ணெய் உள்ளிட்ட தட்டுப்பாடான பொருட்களை வழங்கும்போது குடும்பப் பதிவு அட்டையின் அடிப்படையில் சரியான பங்கீட்டு முறைமையின் கீழ் அவை வழங்கப்பட வேண்டும்.

இதுவிடயத்தில் மாவட்ட அரச நிர்வாகம் தனது அதிகாரத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

இல்லையேல் கறுப்புச் சந்தை வியாபாரம் களைகட்டி அப்பாவி மக்களின் சீவனோபாயத்துக்கு உலைவைக்கின்ற கொடுமை சர்வசாதாரணமாக நடந்தாகும்.

## மன்னார் மாவட்டத்தில் உணவுத் தட்டுப்பாட்டை தடுக்க முன்னாயத்த நடவடிக்கைகள்

*(மன்னார்)*

**மன்னார் மாவட்டத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து, அத்தியாவசிய பொருட்களை களஞ்சியப்படுத்தி பயனடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 3 மாதங்களுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்படாத வகையில், மாவட்டத்தை பாதுகாக்கும் வகையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் கோதுமைமா தட்டுப்பாடு ஏற்படும் கால கட்டத்தில் அதற்குப் பதிலாக அரிசி மாவை பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மூன்று மாத காலத்தில் அறுவடை செய்யக்கூடிய மரவள்ளியை நட்டு மூன்று மாதத்தின் பின் அதன் விளைச்சலை மக்கள் பயனடையக்கூடிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தக நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க ஆலோசனை வழங்கப்பட்டது.

பனை சார்ந்த உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்வதற்கான ஆலோசனை வழங்கப்பட்ட தோடு அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்போடு பால் உற்பத்தியை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் அரிசிக்கு பாரிய அளவில் தட்டுப்பாடு ஏற்படாது என்ற காரணத்தால் நெல்லை களஞ்சியப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சமுர்த்தி ஊடாக வழங்கப்பட்ட விதைகள்.மற்றும் 17 ஆயிரம் குடும்பங்களுக்கு பயன் தரும் கன்றுகள் ஒரு குடும்பத்திற்கு 40 வீதம் ஏற்கனவே வழங்கப்பட்டது. அதனூடான உற்பத்தியை பெற்று மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 10 ஆயிரம் முருங்கை மரக் கன்றுகள் மக்களுக்கு வழங்கப்பட்டது.அதன் பயன்பாட்டையும் உறுதிப் படுத்த அறிவுறுத்தி உள்ளோம்.

குறிப்பாக கடல் உணவுகளை கருவாடாக பதப்படுத்தி வைக்கவும் ஆலோசனை வழங்கி உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(4-285)

### எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க
## அரச உத்தியோகத்தர்கள் வீட்டிலிருந்து வேலை செய்வது ஊக்கப்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்கவும், எரிபொருளின் பயன்பாட்டைக் குறைக்கவும் அரச உத்தியோகத்தர்களை வீட்டிலிருந்து வேலை செய்வது ஊக்கப்படுத்தப்படவுள்ளது.

நிறுவனத் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் பொதுத்துறை பணியாளர்கள் பணிபுரிய அழைக்கப்படுவார்கள் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எரிபொருளின் பயன்பாட்டைக் குறைக்கவும், எரிபொருள் நெருக்கடியை நிர்வகிக்கவும் வீட்டிலிருந்து வேலை செய்வது ஊக்குவிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தியாவசியமற்ற ஊழியர்களை வீட்டிலிருந்து வேலை செய்ய அனுமதிக்குமாறு அரச நிறுவனங்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நாளாந்தம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)

## இலங்கையில் எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்
## எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் மக்கள் ஆதங்கம்

(கொழும்பு)

இலங்கையில் எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதை சொல்ல முடியாது என மக்கள் ஆத்திரம் வெளியிட்டுள்ளனர்.


நேற்று அதிகாலை திடீரென பெற்றோல் மற்றும் டீசல் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன என்ற போதும் தொடர்ந்தும் எரிபொருள் நிலையங்களை நோக்கி நூற்றுக்கணக்கான வாகனங்கள் வரிசைகளில் நிற்பதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில் தமது நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மக்கள் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், நாட்டில் மக்கள் அனைவரும் இறப்பதற்கே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசாங்கத்தை உடனடியாக முடிவிற்கு கொண்டு வந்தால் தான் நிம்மதி. பெற்றோலின் விலை சுமார் 400 ரூபா ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முச்சக்கரவண்டிகளின் கட்டணங்கள் அதிகரிக்கும். ஆனால் மக்கள் முச்சக்கரவண்டிகளில் பயணம் செய்வதை தவிர்ப்பார்கள். அப்படியானால் முச்சக்கரவண்டி சாரதிகள் எப்படி வாழ்வது? ரணில் வந்தும் என்ன நடந்தது? எல்லா பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ம- குருதேவரின் பாடலைக் கேட்டு தன்னை மறந்தார். மந்திரத்தில் கட்டுண்ட பாம்பு போல் ஆனார். தயக்கத்தோடு குருதேவரிடம், ' இன்று இனி ஏதாவது பாடுவீர்களா?' என்று கேட்டார். குருதேவர் சிறிதுநேரம் யோசித்துவிட்டு, ' இல்லை, இனி பாட்டு இருக்காது' என்றார். பிறகு எதையோ நினைத்துக்கொண்டவர் போல்,' 'ஒன்று செய், நான் கல்கத்தாவில் பலராமின் வீட்டிற்குப் போவேன். அங்கே வா. நான் பாடுவதைக் கேட்கலாம்' என்றார். ம-அப்படியே வருவதாகக் கூறினார்.

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'பலராம் போஸை உனக்குத் தெரியுமா?'

ம- : 'இல்லை சுவாமி, தெரியாது.'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'அவரது வீடு போஸ்பாராவில் இருக்கிறது.'

ம-: 'நல்லது சுவாமி. நான் விசாரித்துக் கொள்கிறேன்.'

ஸ்ரீராமகிருஷ்ணர் [illegible]த்தில் நடந்துகொண்டே, 'உன்னை ஒன்று கேட்கிறேன்----- [illegible]' என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 72

அட்டவணை (S2) - இரத்தினபுரி மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| எஹலியகொடை | 83016 | 3446 | 3458 | 45 | 89965 |
| குருவிற்ற | 79716 | 4217 | 1843 | 97 | 85873 |
| எலபாத | 82613 | 9282 | 42 | 70 | 92007 |
| இரத்தினபுரி | 82174 | 8965 | 5760 | 226 | 97125 |
| இம்புல்பே | 58747 | 26419 | 921 | 81 | 86168 |
| பலாங்கொடை | 75729 | 3770 | 5223 | 177 | 451138 |
| பெல்மதுளை | 80976 | 13464 | 473 | 135 | 95048 |
| கஹவத்த | 60957 | 29346 | 3840 | 247 | 94390 |
| கலவான | 82265 | 13869 | 494 | 55 | 96683 |
| வெலிகேபொல | 82446 | 3039 | 244 | 48 | 85777 |
| கொலொன்ன | 86860 | 643 | 22 | 74 | 87599 |
| எம்பிலிபிட்டிய | 92312 | 101 | 26 | 34 | 92473 |
| மொத்தம் | 947811 | 116561 | 22346 | 1289 | 1088007 |




### கேகாலை மாவட்டம் பற்றிய தகவல்கள்

புவியியல் அடிப்படையில் வடக்கு அகலாங்கு 6°50' மற்றும் 7°23' இற்கு இடையிலும் கிழக்கு நெட்டாங்கு 80°10' மற்றும் 80°35' இற்கும் இடைய்யிலும் அமைந்துள்ள கேகாலை மாவட்டம் 1,693 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தின் நிலப் பரப்பில் 34% இந்த மாவட்டத்திற்கு உரியதாகும். கேகாலை மாவட்டம் 1685 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பையும் 8 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப்பரப்பையும் கொண்டுள்ளது.

**கேகாலை மாவட்டம் 1,693 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. சப்ரகமுவ மாகாணத்தின் நிலப் பரப்பில் 34% இந்த மாவட்டத்திற்கு உரியதாகும். கேகாலை மாவட்டம் 1,685 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பையும் 8 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப் பரப்பையும் கொண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு இந்த மாவட்டத்தின் வனப் பிரதேசம் 154 சதுர கிலோ மீற்றர் என மதிப்பிடப்பட்டுள்ளது.**

வடக்கு திசையில் குருநாகல் மாவட்டத்தையும், தெற்குத் திசையில் இரத்தினபுரி மாவட்டத்தையும், கிழக்குத் திசையில் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களையும் மேற்குத் திசையில் கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டு இந்த மாவட்டத்தின் வனப் பிரதேசம் 154 சதுர கிலோ மீற்றர் என மதிப்பிடப் பட்டுள்ளது. இது மாவட்டத்தின் மொத்தப் பரப்பில் 9.1% ஆகும். இந்த மாவட்டத்தின் நிலப் பரப்பின் உயரங்கள் கடல் மட்டத்திற்கு மேல் 10 மீற்றர் தொடக்கம் 1,930 மீற்றர் வரையில் வேறுபடுகின்றது.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் படி (2012) மொத்த சனத்தொகை 840,648 ஆகும். இந்த மாவட்டத்தின் சன அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 499 ஆகும். 10 வயதுக்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு 96.0% ஆகும். இந்த மாவட்டத்தின் தலைநகரமாக கேகாலை நகரம் கொழும்பிலிருந்து 65 கிலோ மீற்றர் நேரடித் தொலைவில் அமைந்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இந்த மாவட்டத்தின் வீதிகளின் நீளம் 1,781 கிலோ மீற்றர்களாக காணப்பட்டது. கேகாலை மாவட்டத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக சேவைத் துறையில் (42%) அதைத் தொடர்ந்து கைத்தொழிற்றுறையில் (35%) மற்றும் விவசாயத் துறையில் (23%) ஆகும்.

**வடக்கு திசையில் குருநாகல் மாவட்டத்தையும், தெற்குத் திசையில் இரத்தினபுரி மாவட்டத்தையும், கிழக்குத் திசையில் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களையும் மேற்குத் திசையில் கம்பஹா மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது.**

### கேகாலை மாவட்டம் இன மற்றும் சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு -2012

கேகாலை மாவட்டத்தில் சனத்தொகை இன ரீதியாக மற்றும் மத ரீதியாக மாறுபட்டுள்ள விதம் அட்டவண்ண (S3) இல் காட்டப்பட்டுள்ளது. அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய, மாவட்டத்தின் பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள் ஆவர்.

அது மொத்த மாவட்ட சனத்தொகையில் 85.5% வீதமாகும். பௌத்தர்கள் 84.5%. அதற்கு அடுத்து தமிழர்கள் (இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்தியத் தமிழர்கள்) 7.3% மற்றும் இந்துக்கள் 6.5%. இலங்கை முஸ்லிம்கள் மற்றும் இஸ்லாமியர்கள் 7 % ஆகும்.

### கேகாலை மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், சப்ரகமுவ மாகாண சபையில் உள்ள கேகாலை மாவட்டத்திற்கு 18 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர்.

2017 ஆம் திருத்தச் சட்டம் பகுதி 3 A (2) இன் படி கேகாலை மாவட்டம் 9 மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

அட்டவணை (S3): இனம், மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு-கேகாலை மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | % | மதம் | எண்ணிக்கை | % |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 718,369 | 85.5 | பௌத்தம் | 709,917 | 84.4 |
| இலங்கைத் தமிழர் | 17,861 | 2.1 | இந்து | 54,350 | 6.5 |
| இந்தியத் தமிழர் | 43,748 | 5.2 | இஸ்லாம் | 61,164 | 7.3 |
| இலங்கை முஸ்லிம் | 59,997 | 7.1 | உரோமன் கத்தோலிக்கம் | 8,777 | 1.0 |
| வேறு | 673 | 0.1 | ஏனைய கிருஸ்தவம் | 6,386 | 0.8 |
| | | | வேறு | 54 | - |
| மொத்தம் | 840,648 | | மொத்தம் | 840,648 | |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 6 அனுமதிக்கான
# பாடசாலைமட்ட வெட்டு புள்ளிகள் வெளியாகின

(கொழும்பு)

தரம் 6 பாடசாலை அனுமதி பெறுவதற்காக 2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பாடசாலைமட்ட வெட்டுப்புள்ளிகள் தொடர்பான விபரம் வெளியாகியுள்ளது.

தமிழ் மொழிமூல பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி விபரங்களும் வெளியாகியுள்ளன.

யாழ். இந்துக்கல்லூரி - 158, யாழ். மத்திய கல்லூரி - 155, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி - 163 புள்ளி. (ம-7)

## புத்தளத்தில் கடும் மழை
# 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பு
### பரீட்சை மண்டபங்களுக்குள் புகுந்த வெள்ளம்

(புத்தளம்)

புத்தளத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் மாத்திரம் 5 ஆயிரத்து 791 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 122 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.



எனினும், இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தத்தமது வீடுகளிலும், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், நேற்று நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சை நிலையங்களில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 600 மாணவர்கள் பரீட்சை எழுதுவதில் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

எனினும், அவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டு எவ்வித தடங்கலுமின்றி பரீட்சையில் தோற்றுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட புத்தளம் - மன்னார் வீதி, கடையார்குளம், நூர் நகர் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகளும், புத்தளம் பிரதேச சபைக்கு உட்பட்ட ரத்மல்யாய, அல்காசிமி சிட்டி மற்றும் பாலாவி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் வெள்ளநீர் புகுந்தமையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தளம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சாஹிரா தேசியப் பாடசாலை, புத்தளம் சென். ஆன்ட்ரூஸ் மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் இந்து மத்திய கல்லூரி என்பனவும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதை அவதானிக்க முடிந்தது. (ம-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது சக ஆசிரியர்
திருமதி அனிற்றா ராஜி அன்ரன்
அவர்களின் அன்பு மாமியார்

அமரர் **ஆசீர்வாதம் பிலோமினா**

அவர்கள் 2022.04.25 அன்று இறைபதம் அடைந்தார். அவர்களின் ஆத்மா சாந்தியடைய 31 ஆம் நாளில் பாடசாலை சமூகம் சார்பில் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 08.04.1940
இறப்பு 25.04.2022

பாடசாலை சமூகம்
யா/ தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி
தெல்லிப்பளை

(11498)

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர்

அமரர் **F.X.அன்ரன்**

அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள்
யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

(11502)

வளர்க மெய்ஞானம் வளர்க சமாதானம்





உன்னை நம்பு

## தென்கயிலை உலக சமாதான ஆலயம்
50/9, ஓம் நமசிவாய வீதி, வைமன் தெரு, யாழ்ப்பாணம்.

# மகாசக்தி யோகம்
(முழுநல வாழ்விற்கான அற்புதப் பயிற்சிகள்)

### இலங்கையில் முதல் தடவையாக இந்தியாவின் தென்கயிலை உலக சமாதான ஆலயத்தின் மூலம் இலவச யோகா தியானப் பயிற்சிகள்

இவ் யோகாப் பயிற்சிகள் மூன்று நாட்கள் இந்தியாவில் இருந்து வருகைதரும் ஞானாசிரியர்களினால் வழங்கப்படவுள்ளதுடன் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், நிறுவனர், உலக அமைதி தூதுவர் குருமகான் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இடம்:- கலாமுற்றம், இலக்கம் 15, நக்காவீதி, யாழ்ப்பாணம்
(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் அருகில்)

திகதி:- 27.05.2022 முதல் 29.05.2022 வரை 3 நாட்கள்

நேரம்:- காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை

பயிற்சி வழங்கும் ஆசிரியர்: மெய்ஞானாசிரியர் K.S. சுந்தரராமன்
பொதுச்செயலர், உலக சமாதான அறக்கட்டளை, இந்தியா

மதிய உணவு, சிற்றுண்டிகள், பயிற்சி அனைத்தும் முற்றிலும் இலவசம்
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையினால் மே 26 ஆம் திகதிக்கு முன் நேரில் அல்லது தொலைபேசி ஊடாகவோ பதிவு செய்யவும்)

(11483)

தொடர்புக்கு:-
தென்கயிலை உலக சமாதான ஆலயம், இலங்கை கிளை,
50/9, ஓம் நமசிவாய வீதி, வைமன் தெரு,
யாழ்ப்பாணம்

தொலைபேசி இலக்கம்:-
ஆலயம் – 021 221 1209, 076 310 0224
ஞானாசிரியர் ப.அச்சுதராஜா 077 760 7026

# வடஇலங்கைச் சங்கீத சபை
## (N.C.O.M.S)
மருதனார்மடம், சுன்னாகம்

### நிர்வாகச் செயலாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

வடஇலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைகள் நடத்துதல், நிதி முகாமைத்துவம் மற்றும் வருடாந்த நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாகச் செயலாளர் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவைப்படும் தகைமை
1. 10 வருட நிதி, நிர்வாக மற்றும் பரீட்சைகள் தொடர்பான அரசாங்க வேலையனுபவம்.
2. கலைத்துறை ஆர்வம் மற்றும் ஈடுபாடு

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையையும் உரிய ஆவணங்களையும் 30.05.2022 முன்னர் வட இலங்கைச் சங்கீத சபை, கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு : வடஇலங்கைச் சங்கீத சபை உறுப்பினர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

முத்து. இராதாகிருஸ்ணன் – தலைவர்
தேவநாயகம் தேவானந்த் – செயலாளர்

வட இலங்கைச் சங்கீத சபை, இலங்கை

(C-4371)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மாணிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11601)

**076 825 7716** (ஆகாஸ்)

**சிறுநீரகம் தேவை**

54 வயதுடைய ஆண் ஒருவருக்கு A+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். (11464)

**076 067 8091, 077 563 1837**
**021 228 3354**

# தேசிய அரசு அமைக்கப்படுமாயின் நிதி அமைச்சை ஏற்க தயார்

## ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் பங்களிப்புடன் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுமாயின் நிதி அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ளத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

"நான் நிதியமைச்சு பதவியை ஏற்றுக்கொண்டாலும் நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. நாட்டின் பிரச்சினை தீர வேண்டுமானால் அதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

நான் நிதியமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டால் அது எனக்கு தனிப்பட்ட வெற்றியாக இருக்கும். ஆனால், அது நாட்டுக்குக் கிடைத்த வெற்றி அல்ல.

நாட்டுக்காக என்னை அர்ப்பணிக்க 100 சதவீதம் தயாராக இருக்கிறேன். நான் நிதியமைச்சகத்தை ஏற்க வேண்டுமாயின் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தில் சுயாதீனமாக செயற்படுவர்களுடன் இணைவதை தேசிய அரசாங்கம் என்று சொல்ல முடியாது என்றார். (ம-7)

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

தரகர் தேவையில்லை (11500)

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 814 7389, 077 241 7589 - ஜெயம்**

**பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு**

எமது HR நிறுவனமானது புதிதாக மேலும் 06 ஆம் கிளை நிறுவனங்களை வட மாகாணத்தில் நிறுவவுள்ளது. அதற்காக முன் அனுபவமுள்ள, முன் அனுபம் அற்ற இளைஞர், யுவதிகளுக்கு இலவசப் பயிற்சி வழங்கி நிரந்தர வேலையில் இணைக்கவுள்ளது.



பயிற்சி காலத்தின் போது
- முதலாம் மாதம் - 20,000/=
- இரண்டாம் மாதம் - 30,000/=
- மூன்றாம் மாதம் - 36,000/=

ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். (11603)

- ஏழு விதமான பதவிகள் உள்ளன. உங்கள் தகுதிக்கு ஏற்ப பயிற்சிகள் வழங்கப்படும்.
வயதெல்லை 16 - 38 வயது வரை
- பயிற்சி காலத்தின் பின்னர் அடிப்படை சம்பளம், ஊக்குவிப்பு தொகை, EPF, ETF, Insurance போன்ற சலுகைகள் வழங்கப்படும்.
- A/L, O/L, 10 படித்த இளைஞர் யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.(50 பேர் மட்டும்)

உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை 077 985 8580 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்.

மேலதிக விபரங்களுக்கு
**074 200 5573, 021 722 3312**

# கொள்கலன் தாங்கிவூர்தி

## கட்டணமும் அதிகரிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக இன்று முதல் கொள் கலன் தாங்கிவூர்திக்கான கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை கொள்கலன் தாங்கிவூர்தி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 35 சதவீதத்தால் கொள்கலன் தாங்கிவூர்திகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளதாக அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



உயர்திரு. **குகசேனன் செட்டியார்**

இலங்கை யாழ்ப்பாணத்தின் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தாவடியை புகுந்த இடமாகவும் கொண்டு மேற்கு இலண்டனை வசிப்பிடமாகக் கொண்டிருக்கும் உயர் திரு. குகசேனன் செட்டியார் அவர்கள் இலண்டன் வருமானவரித் திணைக்களத்தில் " TAX TECHNICAL SPECIALIST OFFICER " என்ற உயர் பதவியைப் பெற்று இன்று 25.05.2022 புதன்கிழமை கௌரவ மகாராணியின் பக்கிங்காம் அரண்மனையில் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

இவர் கொக்குவில் மேற்கு சுப்பிரமணியம் செட்டியார் - சரஸ்வதி தம்பதிகளின் புதல்வரும் தாவடியைச் சேர்ந்த பதிவாளர் அன்னலிங்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் கௌரியின் அன்புக் கணவருமாவார். அத்துடன் மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலையின் ஆளுநர் சபைத் தலைவராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமூக, சமயப் பணிகளில் முன்னின்று உழைத்துவரும் இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். அவரின் புகழ் மேன்மேலும் வளரவேண்டுமெனவும் எதிர்காலத்தில் மேலும் பல பட்டங்கள் பெற்று நல்ல உடலாரோக்கியத்துடன் பல்லாண்டு வாழவேண்டுமென எல்லாம் வல்ல தாவடி அம்பலவாண வேதவிநாயகப் பெருமானையும் கொக்குவில் வேம்படி முருகப் பெருமானையும் இறைஞ்சி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர் :
பதிவாளர் அ. செந்தில்குமரேசன்
பேராசிரியர் க. தேவராஜா

(C-4369)

**பெண் விற்பனையாளர் தேவை**

எமது புடைவை நிறுவனத்திற்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை.

பழக விரும்புபவர்களும் வேலைக்கு அமர்த்தப்படுவர்.

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்**
இல. 41, பெரிய கடைவீதி,
யாழ்ப்பாணம். (11604)

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4360)

VISA
• STUDENT VISA • TOURIST VISA
• SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில்**
**12 பரப்புக் காணி விற்பனைக்கு**
நிலப்பரப்பு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.

(11491)

**பார்வையிடும் நேரம்** காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

**077 623 4204, 077 288 0152,**
**076 658 3621**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.